திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட

கலெக்டர் அலுவலகம் திட்டமிடப்பட்ட இடத்தில் கட்டப்படும்

கருணாநிதி அறிவிப்பு

சென்னை, மே. 28-

"திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட கலெக்டர் அலுவலக புதிய கட்டிடம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட இடத்திலேயே கட்டப்படும்" என்று, முதல்- அமைச்சர் கருணாநிதி சட்ட சபையில் அறிவித்தார்.

2-வது நாள் விவாதம்

தமிழ்நாடு சட்டசபையில், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நேற்று 2-வது நாளாக விவாதம் நடந்தது.

இதில் கலந்து கொண்டு உறுப்பினர் பெரு.திருவேங்கடம் (தி.மு.க) பேசியதாவது:-

வேண்டுகோள்

தமிழ்நாட்டில் ஏற்கனவே சில மாவட்டங்கள் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டமும் வறட்சி மாவட்டமாக தான் உள்ளது. எனவே மற்ற வறட்சி மாவட்டங்களுடன் சேர்த்து இதையும் அறிவிக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியில் கிராமங்களில் குடிநீர் தட்டுபாடு உள்ளது. இதைப்போக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

கரும்பு விவசாயிகள்

கள்ளக்குறிச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இங்கு $7\frac{1}{2}$ லட்சம் டன் கரும்பு அரைப்பதற்கு கரும்பு விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். ஆனால் அங்கு கடந்த 6 மாதங்களாக $2\frac{1}{2}$ லட்சம் டன் அரவை நடந்துள்ளது. ஆலை அரவையின் தாமதத்தால் விவசாயிகள் பயிரிட்டுள்ள ஏறக்குறைய 5 லட்சம் டன் கரும்பு பாதிக்கப்படும் நிலை உள்ளது. துரித நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகளைக் காப்பாற்றத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கலெக்டர் அலுவலக கட்டிடம்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு ஏற்கனவே தி.மு.க. ஆட்சியில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து அறிவிக்கப்பட்டது.

ஆனால், கடந்த ஆட்சியாளர்கள், அந்த இடத்தை மாற்றி, தி.மு.க. காலத்தில் தேர்வு செய்த இடம் என்ற ஒரே காரணத்தால் புதிதாக ஒரு இடம் தேர்வு செய்தனர். அந்த இடம் அதிகமாக பக்தர்கள் வந்து செல்லும் ரமணமகரிஷி ஆசிரமம், விசிறி சாமியார் ஆசிரமம் மற்றும் கோவித்தரிசாமிகள் ஆசிரமம் ஆகியவற்றுக்கு அருகே தேர்வு செய்தனர்.

இங்கு கட்டிடம் கட்டுவதற்கு சிலர் கோர்ட்டில் தடையாணை பெற்றுள்ளனர். கலெக்டர் அலுவலகத்துக்கான புதிய கட்டிடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டித் தரவேண்டும்.

தி.மு.க. ஆட்சியில்....

முதல்- அமைச்சர் கருணாநிதி (குறுக்கிட்டு):- திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்துக்கான அறிவிப்பை எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அறிவித்தபோதிலும், நான் முதல்- அமைச்சராக இருந்த போது அமைக்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கான இடம் தேர்வு செய்து கட்டி முடிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், என்னகாரணத்தினாலோ முதலில் தேர்வு செய்த இடத்தை விட்டுவிட்டு ரமணாசிரமத்துக்கே அருகே கட்டுவதற்கு முடிவு செய்தனர். அங்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கும் தடையாணை ("ஸ்டே") வாங்கி விட்டனர்.

புதியகட்டிடம்

இந்த இடத்தில் கட்டுவது தவிர்க்கப்படவேண்டும் என்று கேட்டு ரமணாசிரம நிர்வாகிகள் எனக்கு கடிதம் எழுதி உள்ளனர். ரமணாசிரமம் எங்கள் கொள்கைக்கு வேறுபட்டு இருந்தாலும், அந்தப்பகுதியில் கட்டிடம் கட்டுவது உகந்ததல்ல.

மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கான புதிய கட்டிடம் ஏற்கனவே தேர்வு செய்த இடத்திலேயோ அல்லது வேறு ஒரு இடத்திலேயோ கட்டப்படும்.

இவ்வாறு கருணாநிதி பேசினார்.